# இந்து
## The Hindu

2016 - 01


## ஆசிரியர் கருத்து...

யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் வெளியிடப்படும் 'இந்து' இதழின் மீள் வருகையானது மகிழ்ச்சியான செய்தியை வெளிப்படுத்துகின்றது. கல்லூரி நன்மை கருதி மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள், சவால்களுக்கு முகம் கொடுத்து அவற்றைக் கையாண்டு முன்னகரும் என்பது திண்ணம். கருத்துருவாக்கங்களுக்கும் பௌதீக வடிவம் பெறும் செயற்பாடுகளுக்கும் இடையில் இடைவெளிகள் கூடிக் குறையும் என்பதும் வெளிப்படையானது. எனினும் இடையறாது தொடரும் தொடரியக்கத்தின் மூலம் அதன் விளைவுகள் வெளிவரும் என்பதும் பேருண்மையாகும் .

இந்து அன்னையானது 125ஆது அகவை கடந்து நீண்ட நெடும் பயணத்தை மேற்கொண்டுள்ளது. தமிழர்களின் தனித்துவமான இக்கல்வி நிறுவனமானது தான் ஆரம்பிக்கப் பட்டதற்கான நோக்கங்களை நிறைவேற்றிய வண்ணம் பெருவிருட்சமாக வளர்ந்து விழுதெறிந்துள்ளது. நம்மவர்களுக்கு மட்டுமன்றி மானிட குலத்திற்கே நன்மை பயப்பவர்களை உலகெங்கும் பரப்பியுள்ளது.

இந்துவின் இவ்விதழானது வரலாற்றுக் கடமையொன்றை சுமந்துள்ளதாக உணர்கின்றது. தாயகத்திலும், உலகளாவிய ரீதியிலும் பரந்து வாழும் இந்துவின் புதல்வர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை மேலும் புதுப்பித்து, பெருப்பித்து, மெருகூட்டி பலமான நிறுவனமாக அமைப்பதன் மூலம் கல்லூரியின் செயற்பாடுகள் பெரும் வலுவூட்டலை பெறும். அதாவது முறைசார் கல்வியின் வெளிப்பாடுகளுக்கு மேலாக சர்வதேச ரீதியாக ஆளுமைமிக்க தொழில் முனைவோர்கள், மதிநுட்பவியலாளர்கள், விஞ்ஞானிகள், தலைவர்கள் போன்றவர்களை உருவாக்குவதற்கான அணிசேர் செயற்பாடுகளாக அமையும் என்பது நிச்சயம்.

இவ்விதழ் கைகளில் தவழும் ஆவணமாகவும் இணையத்தில் உலாவரும் பதிப்பாகவும் வெளிவருகிறது. இது எம் பணியினையாற்ற பெறுமதியான ஆரம்ப தூண்டுதலாக அமையுமென நம்புகின்றோம்.

### உள்ளே...


- ஆசிரியர் கருத்து .......................... ப.1
- அதிபரின் ஆசிச் செய்தி ................ ப.2
- தலைவரின் செய்தி.......................... ப.2
- ஆட்சிக்குழு விபரம்....................... ப.3
- இனி கல்வியே எம் எதிர்காலத்தை தீர்மானிக்கும் .......................... ப.4
- க.பொ.த. சாதாரணதர பெறுபேறுகள் 2015 - ஒரு பார்வை .................. ப.4


## ஒரு துளி உயிர் தரும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு 26 புரட்டாதி 2015 அன்று யாழ். இந்துவில் நடத்தப்பட்ட இரத்ததான நிகழ்வு. இந்நிகழ்வில் எமது சங்கத்தின் பங்களிப்பைச்சிலாகித்து கொழும்பில் இடம்பெற்ற உலகக் குருதிக்கொடையாளர் தின தேசிய நிகழ்வின் போது சங்கத்துக்கு விசேட விருதும் வழங்கப்பட்டது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச் செய்தி



இந்து எனும் இச்சிற்றேடு மீண்டும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் புது மெருகுடன் வெளியிடப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது கல்லூரியின் வளர்ச்சியில் மிகவும் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்ற யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமானது மிகவும் துடிப்புள்ள செயற்குழுவினரால் நிர்வகிக்கப் பட்டு வருகின்றது. இந்த வகையில் இவர்கள் பல செயற் திட்டங்களை எதிர் காலத்தில் செய்ய இருப்பது மகிழ்ச்சிக்கு உரியது.

தமிழர்களால் முக்கியமாக நம்மவர்களில் காணப்படுகின்ற ஒரு குறைபாடு எமது செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் இற்றைப்படுத்துவதிலும் ஏனோ அதிக சிரத்தை எடுப்பதில்லை. ஆனால் இச் செய்திமடல் எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தித்து கல்லூரியினதும், பழைய மாணவர் சங்கங்களினதும், மற்றும் கல்லூரி சார்ந்த அமைப்புக்களினதும் செயற்பாடுகளை வெளிக்கொண்டு வரவும், சமூகத்தில் ஒரு வெளிப்படுத்தன்மையைப் பேணவும் உதவும். இதன் மூலம் கல்லூரி மீதும், அது சார்ந்த அமைப்புக்கள் மீதும் சமூகத்தின் நம்பிக்கை மேலும் மேலும் கட்டியெழுப்பப்படும் என்ற உன்னதமான எதிர்பார்ப்புக்களுடன் இச்செய்தி இதழ் தொடர்ந்து சிறப்பாக வெளிவர எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானை வேண்டுவதோடு இச் செயல்திட்டங்களை செயல்படுத்துகின்ற நல்லுள்ளங்களுக்கு எனது அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

அதிபர்
இ. தயானந்தராஜா

# தலைவரின் செய்தி

அன்பான இந்துவின் உடன் பிறப்புக்களே!

நீண்ட நாட்களின் பின் வெளிவரும் 'இந்து' இதழுக்காக இச் செய்தியை வழங்குவதில் பழைய மாணவர் சங்கத் தலைவர் என்ற வகையில் பேருவகை அடைகின்றேன். இந்துவின் மைந்தர்களிடையேயான தொடர்பாடலுக்கான முக்கிய களமாக 'இந்து' இனி வரும் காலங்களில் மிளிர வேண்டுமென்பது எனது பேரவா. மேலும் கல்லூரி நிர்வாகத்திற்கும் பழைய மாணவர்களுக்கும் உறவுப்பாலமாகவும் இவ்விதழ் விளங்க வேண்டும். பூமிப் பந்தின் திசையனைத்தும் பரந்து வாழும் இந்து அன்னையின் புதல்வர்களுக்கும் கல்லூரியோடும் தாயகம் வாழ் சகோதரர்களோடும் உள்ளத்தால் உறவாடி உணர்வால் கலந்து மகிழ 'இந்து' தன்னால் பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்ப்போம். சர்வதேச ரீதியில் அமைந்துள்ள பழைய மாணவர் சங்கங்கள் ஒரு குடையின் கீழ் உண்மையான சகோதரத்துவத்தோடும் உள்ளன்போடும் இணைந்து எமது குரலாக 'இந்து' ஓங்கி ஒலிக்கட்டும். இந்து இதழை புதிய நிர்வாகத்தினூடாக வெளியிடுவதற்கு பங்களிப்பை வழங்கிய எமது பத்திராதிபருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். இதழைப்படியுங்கள். உங்கள் எண்ணங்களையும் விமர்சனங்களையும் மறக்காமல் எம்மோடு பகிருங்கள். உங்கள் கருத்துக்கள் தான் எம்மை எம் பணியில் ஊக்குவிக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

எல்லாம் வல்ல இறைவன் எம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.



'தமிழர் எம் வாழ்வில் தாயென மிளிரும்
தனிப்பெரும் கலையகம் வாழ்க!

அன்புடன் Dr. வை. யோகேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக்குழு
## 2016/2017

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | Dr. வை. யோகேஸ்வரன் | தலைவர் |
| 2. | திரு. த. சிவரூபன் | செயலாளர் |
| 3. | Dr. கோ. றஜீவ் | பொருளாளர் |
| 4. | திரு. சி. இராசநாயகம் | உப தலைவர் |
| 5. | அதிபர். ஐ. தயானந்தராஜா | உப தலைவர் |
| 6. | திரு. ச. நிமலன் | உப தலைவர் |
| 7. | Dr. அ. ஜெயக்குமாரன் | உப தலைவர் |
| 8. | திரு. ந. வித்தியாதரன் | உப தலைவர் |
| 9. | திரு. க. சுசீந்திரன் | உப தலைவர் |
| 10. | திரு. த. தவரூபன் | உப செயலாளர் |
| 11. | Dr. ப. நந்தகுமார் | உப பொருளாளர் |
| 12. | திரு. சு. தனேஸ்குமார் | பத்திராதிபர் |
| 13. | திரு. த. சுஜீவன் | அங்கத்தவர் |
| 14. | திரு. தே. தீபன் | அங்கத்தவர் |
| 15. | Eng.சு. சுதர்சன் | அங்கத்தவர் |
| 16. | திரு. த. சிவதாஸ் | அங்கத்தவர் |
| 17. | Dr. சு. சிவபாதமூர்த்தி | அங்கத்தவர் |
| 18. | Dr. செ. அறிவுச்செல்வன் | அங்கத்தவர் |
| 19. | Dr. ச. கணேஸ்குமார் | அங்கத்தவர் |
| 20. | திரு. க. தர்மகுலசிங்கம் | அங்கத்தவர் |
| 21. | திரு. தெ. பிரஜீவ் | அங்கத்தவர் |
| 22. | திரு. கு. கௌதமன் | அங்கத்தவர் |
| 23. | திரு. சி. சுந்தரேஸ்வரன் | அங்கத்தவர் |
| 24. | திரு. பா. பாலசங்கர் | அங்கத்தவர் |
| 25. | திரு. மு. கணேசராஜா | அங்கத்தவர் |
| 26. | திரு. வை. கந்தப்பா | அங்கத்தவர் |
| 27. | திரு. நீ. பகீரதன் | அங்கத்தவர் |
| 28. | திரு. ச. சிவகுமாரன் | அங்கத்தவர் |
| 29. | Dr.ப. திலீபன் | அங்கத்தவர் |
| 30. | திரு. பா. மிரோஜன் | அங்கத்தவர் |

## உப குழுக்கள்

**கல்வி**
சி. சுந்தரேஸ்வரன்
ப. நந்தகுமார்
சி. இராசநாயகம்

**விளையாட்டு**
ந. வித்தியாதரன்
க. தர்மகுலசிங்கம்
செ. அறிவுச்செல்வன்
ம. கணேசராஜா
த. சிவதாஸ்

**இணையத்தளம்**
த. தவரூபன்
த. சிவரூபன்
த. சுஜீவன்
கோ. றஜீவ்

**நிதி**
கோ.றஜீவ்
அ. ஜெயக்குமாரன்
தெ. பிரஜீவ்
க. சுசீந்திரன்
த. தவரூபன்
கு. கௌதமன்

**யாப்பு**
ந. வித்தியாதரன்
சு. சிவபாதமூர்த்தி
த. தவரூபன்
கு. கௌதமன்

**உட்கட்டுமானம்**
வை. கந்தப்பா
மு. கணேசராஜா
கோ. றஜீவ்
அ. ஜெயக்குமாரன்
சு. சுதர்சன்

**தொல்லியல்**
அருங்காட்சியகம்
ப. நந்தகுமார்
சு. சிவபாதமூர்த்தி
கு. கௌதமன்
த. சுஜீவன்

**மேலதிக கல்விசார் நடவடிக்கைகள்**
வை. கந்தப்பா
ந. வித்தியாதரன்
சு. தனேஷ்குமார்
த. சுஜீவன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "இனி கல்வியே எம் எதிர்காலத்தை தீர்மானிக்கும்"

எமது வடபுலக்கல்விப் பெறுபேறுகள் பல்வேறு கவன ஈர்ப்பான்களாலும், தாயக வாழ்வாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகளாலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக 1985 தொடக்கம் 2014 வரையான பல்கலைக்கழக தெரிவு தொடர்பான ஆய்வுகள் கோடிகாட்டுகின்றன.

அன்று ஆட்சி நகரங்களில் செழிப்புற்று இருந்த யாழ்ப்பாணம் தலைசிறந்த கல்வியாளர்களை தன்னகத்தே கொண்டு மிக உயரிய பண்பாட்டு விழுமியங்களை கொண்டதாக விளங்கியது. இவ் அழியாத கல்விச் செல்வத்தை சேர்ப்பதில் தமிழர்கள் செய்துள்ள தியாகங்கள் எண்ணிலடங்காதவையாகும். இன்று இந்த தியாகச் செயற்பாட்டில் உருவாகிய தமிழ் அறிவியலாளர்கள் உள்நாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் பரந்து வாழ்வதை காணக்கூடியதாக உள்ளது. கல்வி செயற்பாடு தமிழினத்தின் சிறப்பாக பார்க்கப்படும் அதே வேளை, பேரினவாத சித்தாந்தங்களால் பல தடவைகள் பல்வேறு கோணங்களில் நெருக்குதல்களுக்கு உள்ளாகிவருவது மறுக்க முடியாத உண்மையாகும்.

தமது கல்வி சூழல் சிதைக்கப்பட்டு, உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட போது பொறுமையிழந்த மாணவர்கள் அணிதிரண்டு எதிர்த்தார்கள். அது காலப்போக்கில் ஆயுதப் போராட்டத்திற்கு வழிகோலியது. உள்நாட்டு போர் உக்கிரமடைந்தபோது கல்வியை தொடரவேண்டிய இளைய தலைமுறையினர் பலர் தமது கல்வியை முற்றாக இழந்து, அந்த நேரத்தின் தேவையில் அதிக அக்கறையும் காட்டினர். இவ்வாறு சொல்லொணாத் துயரங்கள் தாண்டி, தடைகளை உடைத்து கல்வி கற்றல் மூலமே தமிழினத்தின் விடியலை விரைந்து பெறமுடியும் என்ற உறுதியான நிலைப்பாடு இளைய தலைமுறையிடம் எழுந்தது.

ஆயினும் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதை தொடர்ந்து இன்று எமது நிலத்தில் தோன்றியுள்ள அரசியல் சூனிய வெளி, புறசக்திகள் திட்டமிட்ட முறையில் சமூக விரோத செயல்களை அரங்கேற்றுவதற்கு இலகுவாக தளம் அமைத்து கொடுக்கிறது என்பதை மறுக்க முடியாது. தமிழ் இனத்தின் தனித்துவத்தை சிதைப்பதற்கு எம் இளைய தலைமுறையை தடம் மாறவைக்கும் செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன. மாணவர்களிடையே அதிகரித்துச் செல்லும் வன்முறைச் சம்பவங்கள், போதைவஸ்து பாவனை என்பன இதன் வெளிப்பாடேயாகும். எமது கல்லூரியின் 125ம் ஆண்டு விழாவில் வடபுல முதல்வர் குறிப்பிட்டது போன்று யாழ் இந்துக்கல்லூரியில் இருந்து மிக சிறந்த கல்வி வல்லுநர்கள் உருவாவது போன்று அரசியல் தூர சிந்தனை மிக்க சமூக பொறுப்புடைய தலைவர்களையும் உருவாக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

எமது இழந்த கல்வியை மீளவும் கொண்டுவந்து பண்புமிக்க சமூகத்தையும் வளம் மிக்க இனத்தையும் பாதுகாத்து புதிய உலகத்தின் சிற்பிகளை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உரிய கடமை என்பதை உணர்ந்து செயலாற்றி வெற்றி பெறுவோம்.

- Dr. சு. சிவபாதமூர்த்தி -

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
# க.பொ.த சா.த 2015 பெறுபேறுகள்
# ஒரு பார்வை

| | |
|---|---|
| மொத்த விண்ணப்பதாரிகள் | - 273 |
| பரீட்சைக்கு தோற்றியோர் | - 271 |
| சித்தி பெறாதோர் | - 7 |
| சித்தி பெற்றோர் | - 264 |
| சித்தி சதவீதம் | - 97.4% |

9 A சித்தி

| | |
|---|---|
| தமிழ் மொழி மூலம் | - 11 |
| ஆங்கில மொழி மூலம் | - 7 |

9 A சித்தி - தமிழ் மொழி மூலம்

1. அருள்பிரகாசம் அன்புச்செல்வம்
2. மந்திரமூர்த்தி பரத்ராஜ்
3. ஸ்ரீதரன் கிருத்திகன்
4. நிமலன் பிருந்தாபன்
5. சத்தியநாதன் புகலோன்
6. சண்முகவடிவேல் கோபிநாத்
7. வரதராஜா கஜபவன்
8. முத்துலிங்கம் தனோராஜ்
9. விஜயச்சந்திரன் தனுஜன்
10. றோபேட் ஆனந்தராஜ் தர்ஸன்
11. கோடீஸ்வரன் வித்தகன்

9 A சித்தி - ஆங்கில மொழி மூலம்

1. ராஜேந்திரன் அட்சஜன்
2. சடாச்சரன் கேதசபா
3. லக்ஸ்மன் கிசாந்
4. தவபாலசுந்தரம் நீலலோகன்
5. நடராஜா நிரஞ்சன்
6. சுகுமார் செந்தூரன்
7. நிர்மலநாதன் சுஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை [illegible] யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.